**மே – 28**

# TNPSC துளிகள்

- செங்கல்பட்டு, சென்னை, கடலூர், திண்டுக்கல், பெரம்பலூர், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தூத்துக்குடி, திருவாரூர் மற்றும் விழுப்புரம் போன்ற பல மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- உலகின் மிகவும் உயரமான சிகரமான எவரெஸ்ட்டில் ஏறிய முதல் மத்தியத் தொழில் துறைப் பாதுகாப்புப் படை வீரர் (CISF) என்ற பெருமையைத் துணை ஆய்வாளர் கீதா சமோட்டா பெற்றுள்ளார்.
- இந்தியாவிலேயே முதன்முறையாக, கேரளாவில் உள்ள அனைத்து 10 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கும் எந்திரவியல் (ரோபோட்டிக்ஸ்) கல்வியானது தற்போது ஒரு கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டுள்ளது.
- பிரசவம் தொடர்பான இந்த மிகக் கடுமையான மற்றும் தடுக்கக்கூடிய காயங்களை அகற்றுவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் மே 23 ஆம் தேதியன்று, மகப்பேறின் போது பிறப்புறுப்பில் ஏற்படும் காயத்தினை தடுப்பதற்கான சர்வதேச தினம் அனுசரிக்கப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ள கோயில் நிலங்கள்




- தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் (HR&CE) கீழ் உள்ள கோயில்களுக்குச் சொந்தமான 2,00,001 ஏக்கர் நிலத்தைக் குறிக்கும் எல்லைக் கல் ஆனது ஸ்ரீபெரும்புதூர் அருகே அடையாளமாக நிறுவப்பட்டது.
- கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைக் குறியிடும் ஒரு திட்டம் ஆனது 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 ஆம் தேதியன்று கபாலீஸ்வரர் கோவிலில் தொடங்கப்பட்டது.
- 1,00,001 ஏக்கர் பரப்பினைக் குறிக்கும் கல் ஆனது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி அன்று திருவள்ளூரில் பெரியபாளையத்தில் உள்ள ஸ்ரீபவானி அம்மன் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் நிறுவப்பட்டது.

## சென்னை மாநகராட்சியின் நகராட்சிப் பத்திரங்கள்

- சென்னைப் பெருநகர மாநகராட்சியானது தமிழ்நாட்டில் முதன்முதலில் தேசியப்

பங்குச் சந்தையில் (NSE) தனது நகராட்சிப் பத்திரங்களை அறிமுகப்படுத்தி உள்ளது / வெளியிட்டுயுள்ளது.

- கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருப்பூர் ஆகிய நகரங்களும் நகராட்சிப் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன.
- இதன் அடிப்படை வழங்கீட்டு அளவு தொகை100 கோடி ரூபாய் மற்றும் அதிகரிக்கப் பட்ட பங்கு விற்பனை அனுமதி (green shoe) ரூபாய் 100 கோடி ஆகும்.
- கொசஸ்தலையாறு நதிப் படுகையில் ஒருங்கிணைந்த வெள்ள நீர் வடிகால் என்ற ஒரு திட்டத்திற்காக (ISWDP) நடைபெற்று வரும் பல்வேறு பணிகளுக்குப் பகுதியளவு நிதி அளிப்பதற்காக என மாநகராட்சியானது இந்தப் பத்திர வருமானத்தைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.
- பிராட்வே பேருந்து நிலையத்தில் உள்ள பல்நோக்கு மையத்திற்காக மாநகராட்சிப் பத்திரங்களை வெளியிடுவதற்கு சென்னை மாநகராட்சி திட்டமிட்டிருந்தது.




# தேசியச் செய்திகள்

## புதுப்பிக்கப்பட்ட OCI இணைய தளம்

- மத்திய அரசானது, புதுப்பிக்கப்பட்ட வெளிநாடு வாழ் குடிமக்கள் (OCI) இணைய தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அதன் புதுப்பிக்கப்பட்ட பயனர் இடைமுகம் ஆனது, வெளிநாடு வாழ் குடிமக்களுக்கு ஆன பதிவுச் செயல்முறையை எளிதாக்கும்.
- இது ஏற்கனவே உள்ள ஐந்து மில்லியனுக்கும் அதிகமான OCI அட்டைதாரர்கள் மற்றும் புதிய பயனர்களுக்கு மேம்படுத்தப் பட்ட பாதுகாப்பு மற்றும் பயனர்களுக்கு உகந்த அனுபவத்தினை வழங்கும்.
- இப்புதிய இணைய தளமானது ஏற்கனவே உள்ள URL தளத்தில்-https://ociservices.gov.in.- கிடைக்கிறது.
- 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின் மூலம், 2005 ஆம் ஆண்டு OCI திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தத் திட்டமானது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நபர்களை இந்திய வெளிநாடு வாழ் குடிமக்களாகப் பதிவு செய்வதற்கு வழிவகை செய்தது.
- இதனைப் பெறுவதற்கு, அவர்கள் 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆ தேதியன்று அல்லது அதற்குப் பிறகு இந்தியாவின் குடிமக்களாக இருந்திருக்க வேண்டும், அல்லது அந்தத் தேதியில் குடிமக்களாக மாறத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

- இருப்பினும், பாகிஸ்தான் அல்லது வங்காளதேசத்தின் குடிமக்களாக இருந்தவர்கள் அல்லது அங்கிருந்து வந்தவர்கள் அல்லது அவர்களின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டி அல்லது கொள்ளு தாத்தா பாட்டிகள் பாகிஸ்தான் அல்லது வங்காளதேசத்தின் குடிமக்கள் எனில் அவர்களும் இதற்குத் தகுதியற்றவர்கள் ஆவர்.
- தற்போதுள்ள OCI சேவைகள் தளமானது, 2013 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இது தற்போது வெளிநாடுகளில் உள்ள 180க்கும் மேற்பட்ட இந்திய தூதரகங்களிலும், 12 வெளிநாட்டினர் பிராந்தியப் பதிவு அலுவலகங்களிலும் (FRROs) செயல்பட்டு வருகிறது.
- இது ஒரு நாளைக்குச் சுமார் 2,000 விண்ணப்பங்களைச் செயல்முறையாக்குகிறது.




## நீதித்துறைப் பணியாளர்களுக்கான தகுதி




- உச்ச நீதிமன்றமானது நுழைவு நிலை நீதிபதி பணிக்கு விண்ணப்பிப்பதற்கு குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் சட்டப் பயிற்சியை மேற்கொண்டிருக்க வேண்டும் என்ற ஒரு கட்டாய நிபந்தனையினை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- பணிக்குச் சேர முயற்சிக்கும் ஆர்வலர்கள், அவர்கள் பயிற்சி பெறும் நீதிமன்றத்தின் முதன்மை நீதித்துறை அதிகாரியால் சான்றளிக்கப்பட்ட, ஒரு வழக்கறிஞராக தங்கள் தொழில்முறை அனுபவத்தைக் காட்டும் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

- இந்தச் சான்றிதழை, முதன்மை நீதித்துறை அதிகாரியால் மிகவும் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப் பட்ட 10 ஆண்டு கால அனுபவமுள்ள ஒரு வழக்கறிஞரும் வழங்கலாம்.
- எந்தவொரு நீதிபதி அல்லது நீதித்துறை அதிகாரியிடமும் சட்ட எழுத்தராகப் பயிற்சி பெற்ற அனுபவமும், அவர்களின் மொத்தப் பயிற்சி ஆண்டுகளின் எண்ணிக்கையைக் கணக்கிடும் போது கருத்தில் கொள்ளப்படும்.
- 2002 ஆம் ஆண்டு ஷெட்டி ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் உச்ச நீதிமன்றத்தின் மூலம் இந்த மூன்று ஆண்டு விதி ரத்து செய்யப்பட்டது.
- அரசியலமைப்பின் 234வது சரத்தின் படி, ஒரு மாநிலத்தின் நீதித்துறைப் பணிக்கு மாவட்ட நீதிபதிகள் அல்லாத நபர்களை நியமிப்பது மாநில ஆளுநரால் மேற்கொள்ளப் படும்.

## அரசுப் பள்ளியில் சேர்க்கை 2024/25

- சுமார் 23 இந்திய மாநிலங்களில் உள்ள அரசுப் பள்ளிகள் 2024-25 ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க சரிவானது பதிவாகியுள்ளது.
- சேர்க்கை எண்ணிக்கையானது, சுமார் 21.83 லட்சம் மாணவர்களாகப் பதிவாகியுள்ள உத்தரப் பிரதேசத்தில் மிகக் கடுமையான சரிவு காணப்பட்டது.
- இச்சேர்க்கையில் பீகாரில் 6.14 லட்சம் மாணாக்கர்களும், இராஜஸ்தானில் 5.63 லட்சம் மாணாக்கர்களும் குறைந்துள்ளனர்.
- 2023-24 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, கர்நாடகாவில் இச்சேர்க்கை எண்ணிக்கை சுமார் 2 லட்சமும்; அசாமில் 1.68 லட்சமும், தமிழ்நாடு மாநிலத்தில் சுமார் 1.65 லட்சமும் மற்றும் டெல்லியில் 1.05 லட்சமும் குறைந்துள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டிற்கான UDISE+ அறிக்கையானது, 2018-19 முதல் 2021-22 ஆம் ஆண்டு வரையிலான சராசரியுடன் ஒப்பிடும் போது ஒட்டு மொத்தப் பள்ளிச் சேர்க்கையில் (அரசு மற்றும் தனியார்) சுமார் 1.5 கோடி என்ற அதிக சரிவு பதிவாகியுள்ளது.

**ENROLMENT DIP: TOP 5 STATES**

| STATE | ENROLMENT | | DROP |
|---|---|---|---|
| | 2023-24 | 2024-25 | |
| UP | 1.74 crore | 1.52 crore | 21.83 lakh |
| Bihar | 1.79 crore | 1.73 crore | 6.14 lakh |
| Rajasthan | 62.65 lakh | 57.02 lakh | 5.63 lakh |
| West Bengal | 1.17 crore | 1.13 crore | 4.01 lakh |
| Karnataka | 43.49 lakh | 41.33 lakh | 2.15 lakh |

# சர்வதேசச் செய்திகள்


## கலிபோர்னியாவின் துலாரே ஏரி

- கலிபோர்னியாவில் ஒரு காலத்தில் பரந்த நன்னீர் பரப்பாக இருந்த துலாரே ஏரி, கடும் பனி உருகலின் காரணமாக 130 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தோன்றியுள்ளது.
- துலாரே ஏரியானது 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், சுமார் 100 மைல்களுக்கு மேல் நீளமும் 30 மைல் அகலமும் கொண்டதாக இருந்தது.

- இது மிசிசிப்பி ஆற்றின் மேற்கில் உள்ள மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும்.
- இருப்பினும், 1800 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், இந்த ஏரியானது வறண்டு போகத் தொடங்கியது.
- குடியேறிகள் அந்த நிலத்தை வேளாண்மைக்குப் பயன்படுத்தினர் என்பதால், இந்த ஏரியிலிருந்து நீர் எடுப்பதற்கு நீர்ப்பாசனக் கால்வாய்கள் மற்றும் பிற அமைப்புகள் கட்டமைக்கப்பட்டன.
- இந்த நடவடிக்கை துலாரே ஏரியை முழுவதுமாக வேளாண் நிலமாக மாற்றியது.
- அதன் நீர் வேளாண்மைக்காகத் திருப்பி விடப்பட்ட பிறகு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு அது மறைந்து விட்டதால் இந்த ஏரியானது "பேய் ஏரி" என்ற ஒரு புனைப் பெயரைப் பெற்றது.




### “கோல்டன் டோம்” எறிகணைப் பாதுகாப்பு அமைப்பு




- அமெரிக்காவானது ‘கோல்டன் டோம்-தங்கக் கவசம்’ என்ற எறிகணைப் பாதுகாப்பு கேடயத்திற்கான வடிவமைப்பைத் தேர்ந்தெடுத்துள்ளது.

- மற்றவற்றுடன் ஒப்பிடுகையில் இந்த அமைப்பில், விண்வெளி அடிப்படையிலான சில உணர் கருவிகள் மற்றும் இடைமறிப்பான்கள் இருக்கும்.
- உண்மையாக உருவாக்கப் பட்டால், இது முதல் முழுவதும் விண்வெளி அடிப்படையில் ஆன ஒரு ஆயுத அமைப்பாக மாறும்.
- இந்த கோல்டன் டோம் கருத்தாக்கமானது இஸ்ரேலின் Iron Dome கவச அமைப்பின் கருத்தினால் ஈர்க்கப்பட்டது.
- Iron Dome ஆனது ஒரு குறுகிய தூர வரம்புடைய, நிலக்கட்டுப்பாட்டு அடிப்படையிலான வான்வழிப் பாதுகாப்பு அமைப்பு ஆகும்.
- இது முதன்மையாக எதிரி நாட்டின் இலக்குகளை நன்கு அடையாளம் காண்பதற்கும் கண்காணிப்பதற்கும் வேண்டி ரேடார்களைச் சார்ந்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பறவை இறக்கை வடிவ சூரிய வெடிப்பு




- "பறவை இறக்கை" நிகழ்வு என்றும் அழைக்கப்படும் ஒரு பெரிய சூரிய வெடிப்பானது சமீபத்தில் கண்டறியப்பட்டது.
- சுமார் ஒரு மில்லியன் கிலோமீட்டருக்கும் அதிகமான நீளம் கொண்ட இந்த பிளாஸ்மா கூறானது, புவியிலிருந்து நிலவிற்கு உள்ள தூரத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக இருந்தது.
- சூரியச் சுடர்கள் என்பது தீவிரமான காந்தச் செயல்பாட்டின் காரணமாக சூரியனின் மேற்பரப்பில் இருந்து வெளியாகும் மின்காந்தக் கதிர்வீச்சின் திடீர் மற்றும் தீவிர வெடிப்புகள் ஆகும்.
- இந்தச் சுடர்கள் ஆனது ஒளியின் வேகத்தில் பயணிக்கின்றன என்பதோடு மேலும் சூரிய வெப்ப உமிழ்வு (CME) ஆனது வினாடிக்கு 250 கிலோமீட்டர் (கிமீ/வி) முதல் 3000 கிமீ/வி வரை பயணிக்கின்றன.
- மிகப்பெரியச் சுடர்கள் "X-வகுப்பு சுடர்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

- மிகச்சிறியவை A-வகுப்பு (நிகழ்வின் அருகாமையில் உள்ளவை), அதைத் தொடர்ந்து உள்ள சுடர்கள் B, C, M மற்றும் X என்று அழைக்கப்படுகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மொசுரா ஃபென்டோனி

- மொசுரா ஃபென்டோனி எனப்படுகின்ற மிகவும் ஒரு சிறிய மூன்று கண்கள் கொண்ட வேட்டையாடும் உயிரினத்தினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- "கடல் அந்துப்பூச்சி" என்று புனைப் பெயர் பெற்ற இந்த உயிரினம் ஆனது, சுமார் 506 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கடலில் வாழ்ந்தது.
- இது இன்றையப் பூச்சிகள், சிலந்திகள் மற்றும் நண்டுகளுடன் நன்கு தொடர்புடைய ரேடியோடான்ட்ஸ் எனப்படும் பண்டைய கடல் உயிரினங்களின் குழுவைச் சேர்ந்தது.
- புதைபடிவங்கள் ஆனது, மிகவும் நன்றாக சுவாசிக்க உதவிய 16 பிரிவுகள் மற்றும் செவுள்களைக் கொண்ட அதன் தனித்துவமான உடல் பகுதியைக் காட்டுகின்றன.




## பெரிட்டோ மோரேனோ பனிப்பாறை

- அர்ஜென்டினாவின் மிகவும் பிரபலமான 250 சதுர கி.மீ அளவு பரப்பளவைக் கொண்ட பெரிட்டோ மோரேனோ பனிப்பாறை தற்போது இடிந்து விழுந்து கொண்டிருக்கிறது.
- சமீபத்தில், 20 மாடி கட்டிடத்திற்குச் சமமான ஒரு பெரிய பனிக்கட்டி சரிந்து, அதன் கீழே உள்ள நீரில் 70 மீட்டர் ஆழத்தில் அது மூழ்கியது.
- இந்தப் பெரிட்டோ மோரேனோ பனிப்பாறையானது 'வெள்ளை இராட்சதர்' என்றும் அழைக்கப் படுகிறது.
- இது அர்ஜென்டினாவின் ஒரு மாகாணமான சாண்டா குரூஸில் உள்ள எல் கலாஃபேட் நகருக்கு அருகில் அமைந்துள்ளது.

- இது யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளமான லாஸ் கிளாசியர்ஸ் தேசியப் பூங்காவின் எல்லைக்குக் கீழ் வருகிறது.
- இது சுமார் 18,000 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கடைசிப் பனி யுகத்தின் போது உருவானது.
- இந்த பனிப்பாறையானது சுமார் 30 கிலோ மீட்டர் நீளம் கொண்டது என்றும், இது நீர் மட்டத்திலிருந்து 60 மீ உயரம் கொண்டது என்றும் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.
- அதன் மிகப்பெரிய அளவு காரணமாக, இது அர்ஜென்டினாவிற்கு நன்னீர் வழங்கும் முக்கிய ஆதாரமாக உள்ளது.




# முக்கிய தினங்கள்

## உலக கடலாமைகள் தினம் 2025 - மே 23




- இந்தத் தினமானது கடலாமைகள் மற்றும் நில ஆமைகளின் பாதுகாப்பு ஒரு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவில் 30 வகையான நன்னீர் ஆமைகள் உள்ளன.
- இந்தியாவில் சிற்றாமைகள்/ஆலிவ் ரெட்லி, பச்சை கடல் ஆமைகள், பெருந்தலைக் கடல் ஆமை, அழுங்காமை மற்றும் தோல் முதுகு ஆமைகள் ஆகிய 5 கடல் ஆமை இனங்களும் உள்ளன.

- ஆமை வளங்காப்பில் இந்தியாவில் மிகவும் முன்னணி மாநிலமாக உத்தரப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.

# இதரச் செய்திகள்

## INSV கௌண்டின்யா

- இந்தியக் கடற்படையானது மிகப் பாரம்பரிய முறையில் கட்டமைக்கப்பட்ட கயிறுகள் மற்றும் வடங்கள் கொண்டு பலகைகள் கோர்க்கப் பட்டு உருவாக்கப்பட்ட கப்பலை INSV கௌண்டின்யா என்ற பெயரில் படையில் இணைத்தது.
- முதல் நூற்றாண்டின் புகழ்பெற்ற இந்திய மாலுமியின் பெயர் கொண்டு இதற்கு இந்தப் பெயரிடப் பட்டது.
- கௌண்டின்யா அல்லது முதலாம் கௌண்டின்யா என்பவர் தென்கிழக்கு ஆசியப் பகுதிக்குப் பயணம் செய்த ஒரு புகழ்பெற்ற முதல் நூற்றாண்டு காலத்தினைச் சேர்ந்த இந்திய வணிகர் ஆவார்.
- இந்தக் கப்பல் ஆனது அஜந்தா குகைகளில் காணப்படும் 5 ஆம் நூற்றாண்டின் ஒரு ஓவியத்தின் படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் மிக நீண்டகால கடல்சார் ஆய்வு வர்த்தகம் மற்றும் கலாச்சாரப் பரிமாற்ற மரபுகளின் உறுதியான அடையாளமாக செயல்படுகிறது.
- இந்த ஆண்டு இறுதியில் குஜராத்திலிருந்து ஓமன் வரையிலான பண்டைய வர்த்தகப் பாதையில் ஒரு கடல் கடந்தப் பயணத்தினை மேற்கொள்வதற்கு என்று இந்தக் கப்பல் தற்போது தயாராகி வருகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★